இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டு தொழில்வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்ற/சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் இணையத்தளத்தினூடாக (ONLINE) தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**தகைமைகள்**

**அ) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்**

1) குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2017.01.22 ஆம் திகதியிலிருந்து 2022.01.22 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியத்தில் பதிவுசெய்து வெளிநாட்டில் தொழில்புரிந்திருத்தல் வேண்டும்.
2) 2021 ஆம் ஆண்டிற்கான 05 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள்ளியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தரவேற்றப்படவேண்டிய (upload) ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சிபத்திரத்தின் மூலப்பிரதி.
- பரீட்சைபெறுபேற்று அட்டவணையின் மூலப்பிரதி.
- தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கம்.

முக்கிய குறிப்பு :- மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் முறையாக தரவேற்றப்படுமிடத்து தங்களுக்கு தொடர் இலக்கம் (Reference Number) ஒன்று கிடைக்கப்பெறும். இவ் இலக்கத்தை பாடசாலை அதிபரினால் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் பிரதி மற்றும் பரீட்சை பெறுபேற்று அட்டவணை பிரதி என்பவற்றின் வலது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**ஆ) க.பொ.த – (சா/த) புலமைப்பரிசில்**

1) குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2016.03.01 ஆம் திகதியிலிருந்து 2021.03.01 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியத்தில் பதிவுசெய்து வெளிநாட்டில் தொழில்புரிந்திருத்தல் வேண்டும்.
2) 2020 ஆம் ஆண்டிற்கான க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தபட்சம் கணிதம் உள்ளிட்ட 06 பாடங்களில் சித்திபெற்று அதில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தியடைந்து க.பொ.த உயர்தரம் கற்பவராக இருத்தல் வேண்டும்.

**தரவேற்றப்படவேண்டிய (upload) ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சிபத்திரத்தின் மூலப்பிரதி.
- க.பொ.த – சா/த பரீட்சைபெறுபேற்று அட்டவணையின் மூலப்பிரதி.
- விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை.
- தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கம்.

முக்கிய குறிப்பு :- மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் முறையாக தரவேற்றப்படுமிடத்து தங்களுக்கு தொடர் இலக்கம் (Reference Number) ஒன்று கிடைக்கப்பெறும். இவ் இலக்கத்தை பாடசாலை அதிபரினால் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் பிரதி மற்றும் க.பொ.த – சா/த பரீட்சை பெறுபேற்று அட்டவணை பிரதி என்பவற்றின் வலது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**இ) க.பொ.த – (உ/த) புலமைப்பரிசில்**

1) குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2015.10.12 ஆம் திகதியிலிருந்து 2020.10.12 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியத்தில் பதிவுசெய்து வெளிநாட்டில் தொழில்புரிந்திருத்தல் வேண்டும்.
2) 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் அல்லாத அரச பல்கலைக்கழகமொன்றில் முழுநேர உள்வாரி பட்டப்படிப்பு முதல் வருடத்தில் கற்பவராக இருத்தல் வேண்டும்.

**தரவேற்றப்படவேண்டிய (upload) ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சிபத்திரத்தின் மூலப்பிரதி.
- க.பொ.த – உ/த பரீட்சைபெறுபேற்று அட்டவணையின் மூலப்பிரதி.
- தேசிய அடையாள அட்டை.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டதை உறுதிப்படுத்தி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி.
- தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கம்.

முக்கிய குறிப்பு :- மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் முறையாக தரவேற்றப்படுமிடத்து தங்களுக்கு தொடர் இலக்கம் (Reference Number) ஒன்று கிடைக்கப்பெறும். இவ் இலக்கத்தை பாடசாலை அதிபரினால் அல்லது பல்கலைக்கழக பதிவாளரினால் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் பிரதி, க.பொ.த – உ/த பரீட்சை பெறுபேற்று அட்டவணை பிரதி மற்றும் பல்கலைக்கழத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை பிரதி என்பவற்றின் வலது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2022.07.15**

முகவரி :-

Manager – Welfare Division
Sri Lanka Bureau of Foreign Employment
234, Denzil Kobbekaduwa Mawatha
Koswatta, Battaramulla.

☎0112880500 - 124